# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஆகஸ்ட் 13, 2023

Weekly E-paper • August 13, 2023


## இழவெடுத்த சாதிவெறி எப்போது ஒழியும்?

சுப. வீரபாண்டியன்



**திராவிட நட்புக் கழகம் முதல் செயற்குழு**

**இப்பக்கம் வேதனை! அப்பக்கம் குதூகலம்!!**

தலையங்கம்

**வாரியார் செய்த வம்பு**

வெற்றிச்செல்வன்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஆகஸ்ட் 13, 2023

Weekly E-paper ● August 13, 2023

# இழவெடுத்த சாதிவெறி எப்போது ஒழியும்?

**சுப. வீரபாண்டியன்**

பள்ளிப் பைகளுக்குள் கத்தியும், அறிவாளும்! மாணவர்களின் மூளைகளில் சாதி வெறியும், அதிகார மனநிலையும்!

எத்தனை கல்வி முன்னேற்றம் வந்தாலும், எத்தனை அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டாலும், சாதியை இழிவென்று கருகாத வரையில், நம் சமூகம் முன்னேறப் போவதில்லை!

நாங்குநேரி நிகழ்வால் நடுங்குகிறது நெஞ்சமெல்லாம்! சாதியின் பெயரால் சக மாணவனை, தங்கள் நண்பனை, இழிவு படுத்துவதும், அதற்கு நியாயம் கேட்டால், இரவு நேரத்தில் அவன் வீடு புகுந்து வெட்டுவதும் எவ்வளவு காட்டுமிராண்டித்தனமான செயல்கள்!

தடுக்க வந்த தங்கையையும் வெட்டி. தாத்தாவைத் தள்ளிவிட்டு அவர் மரணத்துக்கும் காரணமாகி, நாங்குநேரி என்னும் ஊருக்கே கெட்ட பெயரைத் தேடித் தந்திருக்கிறார்கள்.

வெட்டப்பட்ட சின்னத்துரை உயிர் பிழைப்பானா என்று தெரியவில்லை. இவர்கள் வாழ்க்கையும் இனி மிஞ்சப் போவதில்லை. இளைஞர்கள் ஆயிற்றே என்று கருணை காட்டுவது கூட இனி நியாயம் இல்லை. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் கடுமையான தண்டனைக்கு அவர்கள் உள்ளாக்கப்பட வேண்டும் என்பதே சரி!



**சாதி தான் சமூகம் என்றால் வீசும் காற்றில் விஷம் பரவட்டும்**

**- கவிஞர் பழனிபாரதி**

இனிமேலாவது சாதியின் பெயரால் ஆயுதங்களைத் தூக்குகிறவர்களுக்கு, இவர்களுக்கு வழங்கப்படும் கடும் தண்டனை ஒரு பாடமாக அமையலாம்!

சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று முதலமைச்சர் சொல்லி உள்ளார். செய்தாக வேண்டும்! அமைச்சர்களும் நேரில் சென்று பார்வையிட்டு இருக்கிறார்கள். சட்டத்தாலும், தண்டனையாலும் மட்டும் இந்தச் சமூகத்தை திருத்தி விட முடியாது. மக்கள் நெஞ்சங்களில், சாதி என்பது அடையாளமில்லை, அவமானம் என்னும் உணர்வை ஆழ விதைக்க வேண்டும்!

சாதி ஆதிக்கத்திற்கும், உணர்வுக்கும் எதிராகப் போராடி வந்த தமிழகத்தில், இப்போது சிலர் சாதிப் பெருமையையைக் “குடிப் பெருமை” என்று சொல்லி புதுப்பிக்க முனைகிறார்கள். அவர்களும் இது போன்ற நிகழ்வுகளுக்குப் பின்புலத்தில் ஒரு காரணமாக இருக்கின்றனர்.

இதனைப் பேராசிரியர் த. செயராமன், தன் சமூக வலைத்தளப் பதிவில், கீழ்காணுமாறு சுட்டி இருக்கிறார்:

“உன் சாதியைச் சொல், நீ தமிழரா இல்லையா என்று நான் கூறுகிறேன் என்றீர்கள். சாதிப் பெருமை பேசினீர்கள். சாதிகளாக வாழ்வோம் என்று மார் தட்டினீர்கள்! அது குடிப் பெருமை என்றீர்கள்”

என்கிறார் பேராசிரியர் செயராமன். இந்தப் போக்கும் இளைஞர்களிடம் சாதி உணர்வை வளர்க்கத் தொடங்கி இருக்கிறது என்பது உண்மை!

இந்தக் கொடுமையான சாதிவெறி இனியும் இந்த மண்ணில் தொடரக்கூடாது. நாம் நடுநிலையாளர்கள் என்று நழுவிப் போகக் கூடாது. பாதிக்கப்படும் பட்டியலின மக்களின் பக்கம் நிற்போம்! தீண்டாமையை வேரோடு சாய்ப்போம்! இழவெடுத்த இந்தச் சாதி இழிவு என்று ஒழியுமோ அன்று வரை அனைவரும் இணைந்து போராடுவோம்!!

●

# திராவிட நட்புக் கழகம்

## முதல் செயற்குழு, 05-08-2023.



திராவிட நட்புக் கழகத்தின் முதல் செயற்குழுக் கூட்டம் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சென்னை, தலைமை அலுவலகத்தில் கடந்த 05-08-2023 அன்று நடைபெற்றது.

இச்செயற்குழுக் கூட்டத்தைத் திராவிட நட்புக் கழக நிறுவனர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் முன்னிலையில், நட்புக் கழகத் தலைவர் ஆ.சிங்கராயர் தலைமையேற்று நடத்தினார். இக்கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஐந்து தீர்மானங்களை ஒருமனதாக நிறைவேற்றினார்கள். தோழர் விஜயராணி நன்றி உரையுடன் கூட்டம் நிறைவடைந்தது.

### திராவிட நட்புக் கழகத் தீர்மானங்கள்:

1 ) 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சிறைக் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்குக் கோரிக்கை வைக்கிறது திராவிட நட்புக் கழகச் இச்செயற்குழுத் தீர்மானம்.

2) திராவிட நட்புக் கழகத்தின் சார்பாக வேலூரில் நடைபெற்ற மதநல்லிணக்க மாநாட்டிற்கு சிறப்பானதொரு பங்களிப்பனைத் தந்த திராவிட நட்புக் கழகத்தின் தலைவர் சிங்கராயர் அவர்களுக்கும், அவருடன் பணியாற்றிய தோழர்களுக்கும் இச்செயற்குழு நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

3) திராவிட நட்புக் கழகத்தின் சார்பில் மாவட்டம் தோறும் இலவச பாடசாலைகள் தொடங்குவது என்று இச்செயற்குழுவில் முடிவு செய்யப்படுகிறது.

4) திராவிட நட்புக் கழகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாநில, மண்டல மற்றும் மாவட்டப் பொறுப்பாளர்களின் பணிசிறக்க இச்செயற்குழு மனதார வாழ்த்துகிறது.

5) திராவிட நட்பு கழகம் தொடங்கப்பட்ட இந்த ஓராண்டு காலத்தில் தமிழக முழுவதும் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும் திராவிட நட்பு கழகத்தின் தலைவர் சிங்கராயர் அவர்களை இச்செயற்குழு மனதாரப் பாராட்டுகிறது

# திருச்சியில், தந்தை பெரியார் விருது

ஆதித்தமிழர் கட்சியின் ‘திராவிடம் காப்போம்’ மாநாடு 06-08-2023 அன்று திருச்சியில் நடைபெற்றது. கட்சியின் தலைவர் கு.ஜக்கையன் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொருளாளர் எழில்.இளங்கோவனுக்குத் ‘தந்தை பெரியார் விருது’ வழங்கி சிறப்புரை ஆற்றினார் நகர்ப்புற வளர்ச்சித் துறை / குடிநீர் வழங்கல் அமைச்சர் கே.என்.நேரு அவர்கள். காங்கிரஸ் கட்சியின் சு.திருநாவுக்கரசு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கே.பாலபாரதி, திராவிட இயக்கச் சிந்தனையாளர் வே.மதிமாறன் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இப்பக்கம் வேதனை! அப்பக்கம் குதூகலம்!!

.மோடியைப் பதவியில் இருந்து இறக்குவதற்காக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை.

நாற்பது நாள்களுக்கும் மேலாக மணிப்பூர் கலவரம், கொலைகள், நிர்வாணப் பாலியல் கொடுமை குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அது குறித்துப் பேசாமல் வாய்மூடியிருக்கும் நாட்டின் பிரதமரைப் பேச வைக்கத்தான் இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

நம்பிக்கையில்லாத் தீர்மாமானத்தின் மேல் பேசிய மோடி 2 மணி 12 நிமிடங்கள் பேசினார். இதில் 1 மணி 58 நிமிடம் வரை மணிப்பூரைப் பற்றி அவர் வாயில் இருந்து ஒரு வார்த்தை கூட வெளி வரவில்லை. வெறும் 14 நிமிடங்கள் மட்டும் சட்டம் தன் கடமையைச் செய்யும் என்பது போலப் பேசியிருக்கிறார்.

நாட்டின் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த மணிப்பூர் துயரத்தைப் பேசாமல் ஏறத்தாழ இரண்டு மணிநேரம் தி.மு.க மற்றும் காங்கிரஸ் கட்சிகளைத் தாக்கியும், கேலி - கிண்டலுமாகப் பேசியிருக்கிறார் மோடி

அதற்கு சிரித்து, கும்மாளமிட்டு மகிழ்ச்சியில் திளைத்துப் போனார்கள் பா.ஜ.க வினர்.

ஒரு பிரதமருக்குத் தன் நாட்டின் மாநிலம் ஒன்றின், மக்களின் கொடுமையான துயரத்தை எப்படிக் களைவது, எப்படிப் பேசுவது என்பது கூடவா தெரியவில்லை?

இது ஒருபுறம் இருக்க, மக்களவையில் உள்துறை அமைச்சர் அமித்ஷா புதிய மசோதாக்களைத் தாக்கல் செய்துள்ளார்.

இதுவரை நடை முறையில் இருந்த இந்திய குற்றவியல் சட்டத்திற்குப் பதிலாக ( IPC), பாரதிய நியாய சம்ஹிதா 2023 என்றும், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்குப் பதிலாக (CRPC), பாரதிய நாகரிக் சுரக்ஷா 2023 என்றும், இந்திய சாட்சிகள் சட்டத்திற்குப் பதிலாக (IEC), பாரதிய சாக்ஷிய விதேயக் 2023 என்றும் பெயர்களை இந்தியில் மாற்றி, வரையறுக்கப்பட்ட மூன்று மசோதாக்களை அவையில் தாக்கல் செய்துள்ளார். பன்முகம் கொண்ட இந்திய ஒன்றியத்தைக் கோர முகமாக்கும் வேலையல்லவா இது!

தேச ஒற்றுமையைக் குலைப்பவர்களுக்கு ஆயுள் தண்டனையாம். என்ன அது தேச ஒன்றுமைக் குலைப்பு? தமக்கு வேண்டாதவர்களைப் பழி வாங்கும் நோக்கம் இது என்பது புரிகிறது. கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தை நெறிக்கும் சர்வாதிகாரமல்லவா இது!

நாடாளுமன்றத்தில் மணிப்பூரை மதிக்கவில்லை, எதிர்கட்சிகளைச் சாடும் வேலையைச் செய்கிறார் மோடி.

இந்தியைத் திணித்து, கருத்துச் சுதந்திரதைப் பறிக்கிறார் அமித்ஷா.

விதைக்கும் விதைகளை நாளை அறுவடை செய்யத்தான் போகிறது பா.ஜ.க.



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைமை அலுவலகத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாளான 07-08-2023 அன்று, தலைவரின் படத்திற்கு மாலையிட்டு, மலர்தூவி அலுவலக மேலாளர் மனோகரன், சென்னை மாவட்டச் செயலாளர் கார்த்திக், மாவட்டப் பொறுப்பாளர் லோகபாலன், அசோக் உள்ளிட்டோர் புகழ் வணக்கம் செலுத்தினார்கள்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408


# வாரியார் செய்த வம்பு

**வெற்றிச்செல்வன்**

*1969-ஆம் ஆண்டு. தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா மறைந்த நேரம். தமிழர்கள் நெஞ்சைப் பிளக்கும் சோகத்தில் மூழ்கியிருந்தனர். தமிழகமே இருண்டிருந்தது. இரண்டாண்டே அரசாண்ட அண்ணா தமிழர் இதயங்களில் இறவாப் புகழ் பெற்றிருந்தார்.*

அந்த வேளையில் கொடிய நஞ்சினைக் கக்கும் நாகப்பாம்பாய் ஒருவர் நெய்வேலியில் மேடை ஒன்றில் இப்படிப் பேசினார்; “அண்ணா அவர்கள் கடவுள் பற்று இல்லாத நாத்திகராய் இருந்தார். அதனாலே எவ்வளவோ லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யும் டாக்டர்களால் பிழைக்க வைக்க முடியவில்லை; அதனால் இறந்தார்” - இப்படிப் பேசியவர் அன்றைய ஆன்மிகச் சொற்பொழிவாளர் என்று அறியப்பட்ட கிருபானந்த வாரியார். இதோடு நில்லாமல் தந்தை பெரியார் குறித்தும், அமைச்சர் நெடுஞ்செழியன் குறித்தும் அவதூறாகவும் பேசினார்.

ஏற்கெனவே கொதிநிலையில் இருந்த தமிழகம், வாரியாரின் பேச்சால் எரிதழலானது. அடுத்த நாளே நெய்வேலி மக்கள் அவரைப் பிடித்து நையப் புடைத்தனர். அதன் பிறகு, அந்நிகழ்விற்கு வருத்தம் தெரிவித்து, மன்னிப்புக் கடிதமும் (பார்க்க: படம்) கொடுத்தார் வாரியார். இச்செய்தியினை விடுதலையில் வெளியிட்டதோடு, வாரியாரைக் கண்டித்துத் தலையங்கம் ஒன்றையும் எழுதினார் பெரியார். தமிழர் இனத்தைச் சேர்ந்த அனுமன், சுக்கிரீவன் போன்றவர்களே தமிழர்களைக் காட்டிக் கொடுக்கின்றனர் என்பதை வருத்தத்துடன் சுட்டிக் காட்டி, பார்ப்பனியத்தை ஒழிக்க, கலைஞரை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்.



மன்னிப்புக் கடிதத்தின் நகல்

அன்புள்ள நெய்வேலி மக்களே.

நான் நேற்று 17—2—69 அன்று அருள்நெறிச் சங்கத்தின் சார்பில் நடந்த கூட்டத்தில் அறிஞர் அண்ணாவைப் பற்றியும், திராவிடர் முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும் கிண்டல்செய்து பேசியதற்கு மனப்பூர்வமாக வருந்துவதோடு உளமாற மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். இனி எந்தக்கூட்டத்திலும தி.மு.க.வைப் பற்றியோ, அதன் தலைவர்களைப் பற்றியோ, எதுவுமே பேசமாட்டேன் என உறுதி கூறுகிறேன்.

மேலும் இந்த அறிவிப்பை எனது மனப்பூர்வமாகத்தான் வெளியிடுகிறேன். யாருடைய வற்புறுத்தலின் பேரிலும் அல்ல என்றும் உறுதிகூறுகிறேன்.

கிருபானந்தவாரி
18-2-69

சாட்சிகள்
எங்கள் முன்னிலையில் எழுதப்பட்டது
1. எஸ். சுப்பிரமணியம்
2. ஜி. பழனி சுப்பிரமணியம்

கிருபானந்தவாரியின் மன்னிப்புக்கடிதத்தின் மூலம் எங்களிடம் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்,

இரா. கனகசபாபதி
தெ. ஆ. மாவட்ட தி.க. அமைப்பாளர்
நெய்வேலி

இதனை எதிர்க்கட்சிகள் பெரிய பிரச்சினை ஆக்கிடத் திட்டமிட்டன. இந்நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டி, சட்டப்பேரவையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த விநாயகம் கேள்வி கேட்டார். அதற்கு அப்போதைய முதலமைச்சரான கலைஞர் அளித்த பதில் முக்கியமானது.

“வாரியார் தமது புராண காலட்சேபங்களில் கேலி கிண்டல்கள் கலந்து பேசுவது வழக்கம். “நான் தவறாகப் பேசியதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்” என்று அவர் கூறியிருப்பதிலிருந்து அவர் அவ்வாறு பேசினார் என்று தெரிகிறது. நெய்வேலியில் மட்டுமல்ல தஞ்சை ஆலயம் ஒன்றிலும் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். “அமெரிக்காவுக்குப் போனாலும் மில்லரே வந்தாலும் ஆண்டவனை நம்பாதவர்களுக்கு இப்படிதான் முடிவு ஏற்படும்” என்று பேசியிருக்கிறார்” என்று வாரியாரின் செயலைத் தவறானது என்று உறுதிப்படுத்துகிறார் கலைஞர்.

என்றாலும் வாரியார் அவ்வாறு பேசுவது பற்றி நாங்கள் கவலைப்படவில்லை என்று சொல்கிறார். அது மட்டுமல்ல, எது எப்படியாகிலும் அதற்காக வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதை அரசு ஆதரிக்காது, நடவடிக்கை எடுக்கும் என்று கண்டிப்புடன் சொல்கிறார்.

எம். ஜி. ஆர். மறைந்தபோது, கலைஞரின் சிலையை உடைத்த சிறுமதியினரும், ஜெயலலிதாவுக்கு டான்சி வழக்கில் தீர்ப்பு வந்தபோது பேருந்தை எரித்த பேதையினரும் இங்கு நினைவுக்கு வருகிறார்கள். உயிருக்கு உயிரான தனது தலைவர் இறந்தபோதும், அவரை அவதூறு செய்தவரைப் பெருந்தன்மையோடு அணுகும் கலைஞரின் செயல் போற்றத்தக்கது. மேலும் வன்முறைக்கு இடம் கிடையாது என்பதை உறுதிப்படுத்தி, திராவிட இயக்கம் எப்போதும் ஓர் அறிவியக்கமாகவே இருந்தது, வன்முறையை ஒருபோதும் அது நாடியதில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகும் கலைஞரின் செயல் இன்றைய இளைஞர்கள் கற்க வேண்டிய பாடம்.

*வாழ்க கலைஞர்!*

*வளர்க அவரது புகழ்!* ●

## பறக்கும் முத்தம்

அடிவயி றெரிய மக்கள்
அலறிடும் சத்தம் எல்லாம்
இடியென வெடிக்கும் போதும்
இசையென அமித்ஷா கேட்பார்!
விடியலைக் காண நீங்கள்
விரைந்திட வேண்டும் என்று
பிடிவாதம் செய்தால் கூட
பிரதமர் வரவே மாட்டார்!!
இறந்திடும் மக்கள் நாளும்
எரிந்திடும் வீடு வாசல்
மறந்திடு! மணிப்பூர்ப் பெண்ணின்
மானம்தான் போனால் என்ன?
பறந்திடும் முத்தம் பற்றிப்
பாராளு மன்றில் பேசு!
சிறக்குமோ இனிமேல் நாடும்
சீச்சிபோ வெட்கம் வெட்கம்!

– சுப. வீரபாண்டியன்